**எட்டாம் வகுப்பு – தமிழ் : வினாவிடைத்தொகுப்பு 2024 –25**

**இயல் – ஒன்று**

**குறுவினா – விடை**

**1.தமிழ் எங்கு புகழ் கொண்டு வாழ்கிறது?**

தமிழ் நிலப்பகுதி முழுவதும் புகழ் கொண்டு வாழ்கிறது.

**2.தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?**

தமிழ் வானம் வரை உள்ள எல்லாப் பொருளையும் அறிந்து வளர்கிறது.

**3.உலகம் எவற்றால் ஆனது?**

உலகம் நிலம் ,தீ, நீர், காற்று ,வானம் ஆகியவற்றால் ஆனது.

**4.செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?**

செய்யுளில் மரபுகளை மாற்றினால் பொருள் மாறிவிடும்.

**5.ஓவிய எழுத்து என்றால் என்ன?**

தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஓவிய வடிவமாக இருந்தது இதனை ஓவிய எழுத்து என்பர்.

**6.ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?**

ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என்பது ஒலி எழுத்து நிலை ஆகும்.

**7.ஓலைச்சுவடிகளில் நேர் கோடுகள் புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன?**

ஓலைச்சுவடிகளில் புள்ளியிட்டும் நேர்கோடுகள் இட்டும் எழுதினால் , அவை கிழிந்து விடும் . அதனால் அவை பயன்படுத்தப்படவில்லை.

**8.வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்து சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டினை எழுதுக.**

எ,ஏ – ஒ,ஓ

**சிறு வினா விடை**

**1. தமிழ் மொழியை வாழ்த்தி பாரதியார் கூறும் கருத்துக்களை எழுதுக**

தமிழ் எந்தக் காலத்திலும் நிலைபெற்றது. எல்லாவற்றையும் சொல்லும். இலக்கிய மணம் பரவச் செய்யும். உலகம் உள்ள வரையிலும் தமிழ் வாழ்க!

**2. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.**

எழுத்துக்களில் புள்ளிகள் தெளிவாக தெரியாததால், மெய்யா ,உயிர் மெய்யா? குறிலா? நெடிலா? என உணர வேண்டியிருந்தது. இது படிப்பவர்களுக்குப் பெரிதும் சிரமத்தைக் கொடுத்தது. எனவே எழுத்துச் சீர்திருத்தம் வேண்டியதாயிற்று.

**3. தமிழ் எழுத்துக்களில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.**

நெடில் எழுத்துக்களில் புள்ளிக்குப் பதிலாக துணைக்கால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எழுத்துக்களில் இரட்டைக் கொம்புகளுக்குப் பதிலாக இணைகொம்பு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**4.எழுத்துக்களின் பிறப்பு என்றால் என்ன?**

உடலிலிருந்து எழும் காற்று மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய ஒன்றில் பொருந்தி ஒலி உறுப்புகளின் முயற்சியால் ஒலிகள் தோன்றுகின்றன. இதனை எழுத்துக்களின் பிறப்பு என்பர்.

**5. மெய்யெழுத்துக்கள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?**

1.வல்லினம் – மார்பு 2.மெல்லினம் – மூக்கு

3.இடையினம் – கழுத்து

**நெடு வினா – விடை**

**எழுத்துக்களின் தோற்றம் குறித்து எழுதுக.**

- ❖ ஆரம்ப காலத்தில் மனிதன் குகைகளிலும் கல்லிலும் குறியீடுகளாக எழுதினான் .
- ❖ இது ஓவிய வடிவமாகவே இருந்தது இதனை ஓவிய எழுத்து என்றனர்.
- ❖ பிறகு ஒவ்வொரு எழுத்தையும் குறிக்க ஒவ்வொரு ஒலி பயன்படுத்தப்பட்டது.
- ❖ அது ஒலி நிலை எழுத்து எனப்பட்டது.

**விரிவானம்:சொற்பூங்கா**

**தமிழில் ஓர் ஓரெழுத்து ஒரு மொழிகளின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகளை தொகுத்து எழுதுக.**

**முன்னுரை**

தமிழில் ஓர் ஓரெழுத்து ஒரு மொழி களின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகளைத் தொகுத்துக் காண்போம்.

**ஓரெழுத்து ஒரு மொழி**

- ❖ தமிழ் மொழி ஓர் எழுத்து மொழி, ஈரெழுத்து மொழி, இரண்டுக்கும் மேற்பட்ட எழுத்துக்கள் உடைய மொழி என மூன்று வகையாக உள்ளது.
- ❖ தமிழில் மொத்தம் 42 ஓரெழுத்து ஒரு மொழிகள் உள்ளன.
- ❖ பூ என்பது ஓர் எழுத்து ஒரு மொழி. அதுவே பிற எழுத்துக்களுடன் இணைந்து பூங்கா என்ற வேறு சொல்லானது.
- ❖ மா என்பது ஓர் எழுத்து ஒரு மொழிகளில் ஒன்று. அது மாநிலம் ,அரிமா என்று வேறு சொல்லாக மாறுகிறது.

**முடிவுரை**

தமிழில் ஓர் ஓரெழுத்து ஒரு மொழி களின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகளைத் தொகுத்துக் கண்டோம்

**பொதுகட்டுரை**

**நான் விரும்பும் கவிஞர் பாரதியார்**

**முன்னுரை**

நான் விரும்பும் கவிஞர் பாரதியார் ஆவார். அவரைப் பற்றி காண்போம்

**பாரதியார்**

- பாரதியார் எட்டையபுரத்தில் சின்னசாமி –இலக்குமி அம்மையாருக்கு மகனாகப் பிறந்தார்.
- பாரதியாரின் இயற்பெயர் :சுப்ரமணியம்.
- தமிழாசிரியராகப் பணியாற்றினார்.
- செல்லம்மாள் பாரதியாரின் மனைவி ஆவார்.

**பாரதியின் படைப்புகள்**

கண்ணன் பாட்டு, குயில் பாட்டு ,பாஞ்சாலி சபதம்,பாப்பா பாட்டு ஆகிய நூல்களைப் பாரதியார் எழுதியுள்ளார்.

**பிடித்த பாடல்கள்**

'ஓடி விளையாடு பாப்பா'
' வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்' –ஆகிய பாடல்கள் எனக்கு மிகவும் பிடிக்கும்.

**முடிவுரை**

பாரதி உலக கவியாய் உயர்ந்த உத்தமர் போற்றுவோம்.

**இயல் 2 – குறு வினா விடை**

**1. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?**

ஓடை உருண்டு தவழ்ந்து நெளிந்து இடையில் விற்காமல் ஓடுகிறது.

**2. ஓடை எழுப்பும் ஒலிக்கு எதனை உவமையாக வாணிதாசன் கூறுகிறார்?**

ஓடை எழுப்பும் ஒலிக்கு முழவை முழக்குவது உவமையாக வாணிதாசன் கூறுகிறார்.

**3. கப்பல் கவிழ்ந்த தன் காரணமாக கோணக்காத்துப் பாட்டு கூறுவது யாது?**

எமனைப் போல வந்த பெரு மழையால் கடல் காற்றில் கடல் கவிழ்ந்தது.

**4. புயல் காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?**

தொண்டைமான் நாட்டில் சிறப்பான மரங்கள் சின்னாபின்னமானது.

**5. கொல்லிமலை பற்றி பாடல் கூறும் செய்தி யாது?**

சித்தர்கள் வாழும் பகுதி கொல்லிமலை. அங்கும் புயல் அடித்தது.

**6. விலை கொடுத்து வாங்க இயலாதவை என சியாட்டல் கூறுவன யாவை?**

1.வானம் 2.காற்று 3.நீர்

**7. நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?**

பூமி செவ்விந்தியர்களுக்குத் தாய். அந்த மண்ணும் அவர்களுக்கே உரியது.

**8. இதனை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என சியாட்டல் கூறுகிறார்?**

எருமைகளை கொல்லுதல், மக்கள் நடமாட்டம் அதிகரித்தல் , மலைகளை மறைத்து தொலைபேசி கம்பிகள் கட்டுதல் ஆகியவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது.

**9.சான்றோர்க்கு அழகாவது எது?**

நடுவுநிலைமையாக இருப்பதே சான்றோருக்கு அழகு.

**10.பழியின்றி வாழும் வழியாகத் திருக்குறள் கூறுவது யாது?**

தன் குற்றத்தை ஆராய்ந்து பிறருடைய குற்றத்தையும் ஆராய்ந்தால் பழியின்றி வாழலாம்.

**11.புலித்தோல் போர்த்திய பசு என்னும் உவமையால் திருக்குறள் விளக்கும் கருத்து யாது?**

கருத்து : மனதை அடக்காமல் தவம் செய்தல்

**சிறு வினா விடை**

**1.ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?**

பயிர்களை வளர்ச்செய்யும். உணவு தந்து நாட்டின் வறுமை போக்கும். புற்களுக்கு இன்பம் சேர்க்கும்.

**2.புயல் காற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட நிலைகளாகப் பாடல் குறிப்பிடும் கருத்துகள் யாவை?**

- ❖ தென்னம் பிள்ளைகள் வீணாகின.
- ❖ சிறப்பான மரங்கள் சின்னாபின்னமாயின.

**3.கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?**

- ❖ பெரிய வீடுகளின் கூரைகள் எல்லாம் மொத்தமாக பிரிந்து சரிந்தன.
- ❖ மாடி வீடுகள் அடியோடு விழுந்தன.

**4. நீர் நிலைகள் குறித்து சாட்டில் கூறியுள்ளவற்றை எழுதுக.**

- ❖ நீரின் சத்தம் என் பாட்டனின் குரலாகும்.
- ❖ ஆறுகள் என்னுடன் பிறந்தவர்கள்.
- ❖ ஓடும் நீர் எனது மூதாதையர்களின் இரத்தமாகும்.

**5. எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?**

- ❖ மலர்கள் என் சகோதரிகள்.
- ❖ மான் ,குதிரை, கழுகுகள் என் சகோதரர்கள்.
- ❖ இயற்கையும் இங்குள்ள மனிதர்களும் ஒரே குடும்பம்.

**6. வினைமுற்று என்றால் என்ன?**

பொருள் முற்றுப்பெற்ற வினைச் சொற்களை வினைமுற்று என்பர்.

**7.தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?**

செய்பவன், கருவி, நிலம் ,செயல் ,காலம் , செய்பொருள்.

**8.வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?**

க ,இய, இயர் ,அல்

**9.ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?**

| ஏவல் வினைமுற்று | வியங்கோள் வினைமுற்று |
|---|---|
| முன்னிலையில் வரும். | இரு திணையிலும் வரும். |
| ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு. | ஒருமை ,பன்மை வேறுபாடில்லை. |
| கட்டளைப் பொருள் உணர்த்தும். | வாழ்த்துதல் முதலிய பொருளில் வரும். |

**நெடு வினா விடை**

**தாய் மண் மீதான செவ்விந்தியர்களின் பற்று குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

- ❖ விலை கொடுத்து வாங்க இயலாதவை : 1.வானம் 2.காற்று 3.நீர்
- ❖ பூமி செவ்விந்தியர்களுக்குத் தாய்.
- ❖ அந்த மண்ணும் அவர்களுக்கே உரியது.
- ❖ எருமைகளை கொல்லுதல், மக்கள் நடமாட்டம் அதிகரித்தல் ,மலைகளை மறைத்து தொலைபேசி கம்பிகள் கட்டுதல் ஆகியவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது.

**விரிவானம் : வெட்டுக்கிளியும் சருகுமானும்**

**முன்னுரை**

வெட்டுக்கிளியும் சருகுமானும் கதையைக் காண்போம்.

**வெட்டுக்கிளியும் சருகுமானும்**

- ❖ ஒரு காட்டில் வெட்டுக்கிளியும் சருகுமானும் வாழ்ந்து வந்தது.சருகு மானின் பெயர் கூரன்.
- ❖ பித்தக்கண்ணு என்னும் சிறுத்தையும் அந்தக் காட்டில் வசித்து வந்தது. பித்தக்கண்ணு ஒருநாள் கூரனைத் துறத்தியது.
- ❖ கூரன் ஒழிந்து கொள்வதற்காக குறிஞ்சிப்புதருக்குள் சென்றது.

- ❖ அங்கிருந்த மரத்தின் மீது வெட்டுக்கிளி ஒன்று இருந்தது.
- ❖ அதனிடம் என்னை காட்டிக் கொடுத்து விடாதே என்று சொல்லி ஒழிந்து கொண்டது.
- ❖ வெட்டுக்கிளி பித்தக்கண்ணுவிற்குக் காட்டிக் கொடுத்துவிட்டது.ஆனால், பித்தக்கண்ணுவால் கண்டுபிடிக்க முடியாமல் திரும்பிப் போனது. கூரன் வெட்டுக்கிளியைக் கண்டித்தது.

**முடிவுரை**

யாருக்கும் தீமை செய்யக்கூடாது என்பதை கதை உணர்த்துகிறது.

**கடிதம்**

**விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பருக்கு பாராட்டு கடிதம் எழுதுக.**

**10 ,பாரதி நகர்,**
**ஈரோடு,**

**அன்பு நண்பா!**

உயிர் நண்பன் எழுதும் கடிதம் .நான் இங்கு நலம் . அதுபோல் நீ அங்கு நலமா? இன்று காலை தொலைக்காட்சியில் உன்னுடைய புகைப்படம் பார்த்தேன். நீ விளையாட்டுப் போட்டியில் மாநில அளவில் பரிசு பெற்றுள்ளாய் என்பதை அறிந்தேன். நானும் என் நண்பர்களும் மகிழ்ந்தோம். மேலும் பல பரிசுகளை வாங்க இறைவனிடம் வேண்டுகிறேன். மற்றவை நேரில்.

**இப்படிக்கு,**

------------

**உறைமேல் முகவரி**
**பெறுநர்**

சிற்பி,
15 ,காந்தி வீதி,
சேலம் – 4

**இயல் – மூன்று**

**குறு வினா விடை**

**1. நோயின் மூன்று வகைகள் யாவை,**

1.மருந்தால் நீங்கும் நோய் 2.மருந்தால் நீங்காத நோய் 3.வெளியில் ஆறி உள்ளிருக்கும் நோய்.

**2. நீலகேசியில் நோய்தீர்க்கும் மருந்துகளாக கூறப்படுபவை யாவை?**

1.நல்லறிவு 2. நற்காட்சி 3.நல்லொழுக்கம்

**3.நம்மை நோய் அணுகாமல் காப்பவை எவை?**

நடைப்பயிற்சியும் நல்ல காற்றும் நம்மை நோய் அணுகாமல் காப்பவை ஆகும்.

**4.அதிகமாக உண்பதால் ஏற்படும் தீமையாக கவிமணி குறிப்பிடுவன யாவை?**

அதிகமாக உண்டால் நோய் ஏற்பட்டு பாயில் விழுவீர்கள்.

**5. மருத்துவம் எப்போது தொடங்கியது?**

தொடக்க காலத்தில் மனிதன் நோய் வந்தபோது இயற்கை தாவரங்களை கொண்டு நோயை தீர்த்தான். அப்போதே மருத்துவம் தொடங்கியது.

**6. நல்வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?**

நடைப்பயணம், யோகா, தியானம் ,மூச்சுப்பயிற்சி, 7மணி நேர தூக்கம், 3 லிட்டர் தண்ணீர்.

**7.தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?**

தாவரங்களின் வேர் ,தழை , மூலிகைகள் , தாதுப்பொருள்கள்.

**சிறு வினா விடை**

**1. நோயின் வகைகளாக அவற்றை தீர்க்கும் வழிகாகவும் நீலகேசி கூறுவன யாவை?**

**நோயின் மூன்று வகைகள்:**

1.மருந்தால் நீங்கும் நோய்
2.மருந்தால் நீங்காத நோய்
3.வெளியில் ஆறி உள்ளிருக்கும் நோய்.

**மருந்துகள்:**

1.நல்லறிவு 2. நற்காட்சி 3.நல்லொழுக்கம்

**2. உடல் நலத்துடன் வாழ கவிமணி கூறும் கருத்துக்களை தொகுத்து எழுதுக.**

- ❖ உடலில் உறுதி உடையவரே! உலகில் மகிழ்ச்சி உடையவர்.
- ❖ தூய்மையைப் பாதுகாத்தால் நீண்ட நாள் வாழலாம்.
- ❖ நடைப்பயிற்சியும் நல்ல காற்றும் நம்மை நோய் அணுகாமல் காப்பவை ஆகும்.
- ❖ அதிகமாக உண்டால் நோய் ஏற்பட்டு பாயில் விழுவீர்கள்.

**3. நோய் பெருக காரணம் என்ன?**

- ✓ நோய் பெருக முதல் காரணம் இயற்கையை விட்டு வந்ததுதான்.
- ✓ உணவில் மாற்றம் மாசுக்கள் நிறைந்த சுற்றுச்சூழல் மன அழுத்தம் நோய் பெருக மற்றொரு காரணம்.
- ✓ உணவுப் பொருட்களில் பூச்சிக்கொல்லிகளும் செயற்கை உரங்களும் பயன்படுத்துவதாலும் நோய் பெருகியது.

**4. பள்ளி குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?**

- ❖ காய்கறிகள் ,கீரைகள் ,பழங்கள் ,சிறுதானியங்களை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- ❖ கணினி ,கைபேசியில் விளையாடுவதைத் தவிர்த்து ஓடி ஆடி விளையாட வேண்டும்.
- ❖ உரிய நேரத்தில் உறங்கவேண்டும். அதிகாலையில் எழ வேண்டும்.

**5. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?**

பொருள் முற்றுப்பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் எச்சம் ஆகும். பெயரெச்சம் வினையெச்சம் என இருவகைப்படும்.

**6. அழகிய மரம் –எச்ச வகை விளக்கு.**

'அழகிய மரம்' எச்ச வகை: குறிப்பு பெயரெச்சம்.
பண்பினை மட்டும் குறிப்பாகக் காட்டுவதால் குறிப்பு பெயரெச்சம்.

**7.முற்றெச்சத்தை சான்றுடன் விளக்குக.**

ஒரு வினைமுற்று எச்ச பொருள் தந்து, மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சம் ஆகும்.
சான்று : படித்தனர் மகிழ்ந்தனர்

**8.வினையெச்சத்தின் வகைகளை விளக்கு.**

வினை எச்சம் இரண்டு வகைப்படும்.
1.தெரிநிலை வினையெச்சம் 2.குறிப்பு வினையெச்சம்

**நெடு வினா விடை**

**தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக**

- தாவரங்களின் வேர் ,தழை , மூலிகைகள் , தாதுப்பொருள்கள் ஆகியன மருந்துப் பொருள் ஆகும்.
- தொடக்க காலத்தில் மனிதன் நோய் வந்தபோது இயற்கை தாவரங்களை கொண்டு நோயை தீர்த்தான். அப்போதே மருத்துவம் தொடங்கியது.
- நோய் பெருக முதல் காரணம் இயற்கையை விட்டு வந்ததுதான்.
- உணவில் மாற்றம் மாசுக்கள் நிறைந்த சுற்றுச்சூழல் மன அழுத்தம் நோய் பெருக மற்றொரு காரணம்.
- உணவுப் பொருட்களில் பூச்சிக்கொல்லிகளும் செயற்கை உரங்களும் பயன்படுத்துவதாலும் நோய் பெருகியது.

**விரிவானம் : தலைக்குள் ஓர் உலகம்**

**மூளையின் வலது இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றித் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை**

மூளையின் வலது இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றித் தொகுத்துக் காண்போம்.

**இடது மூளை**

- இடது மூளை நாம் பேச எழுத கணக்கிட சிந்திக்க உதவுகிறது.
- அறிவாற்றல் ,சதுரங்கம் போன்ற விளையாட்டுக்கள் பிறப்பதும் இடது பகுதி மூளைதான் காரணம்.

**வலது மூளை**

- வலது பகுதி மூளை தம்பி போன்றது இதனால்தான் வடிவங்களை நாம் உணருகிறோம்.
- கவிதை எழுதுவது படம் வரைவது நடனமாடுவது நடிப்பது போன்றவை எல்லாம் வலது மூளையின் பாதிதான்.

**முடிவுரை**

மூளையின் வலது இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றித் தொகுத்துக் கண்டோம்.

**பொதுக்கட்டுரை**

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**

**முன்னுரை**

உடலில் உறுதி உடையவரே! உலகில் மகிழ்ச்சி உடையவர்.

**நோயற்ற வாழ்வு**

- நடைப்பயிற்சியும் நல்ல காற்றும் நம்மை நோய் அணுகாமல் காப்பவை ஆகும்.
- தூய்மையைப் பாதுகாத்தால் நீண்ட நாள் வாழலாம்.

**நோய்க்குக் காரணம்**

- நோய் பெருக முதல் காரணம் இயற்கையை விட்டு வந்ததுதான்.
- உணவுப் பொருட்களில் பூச்சிக்கொல்லிகளும் செயற்கை உரங்களும் பயன்படுத்துவதாலும் நோய் பெருகியது.

**முடிவுரை**

நோயின்றி வாழ்வோம் ,நலம், வளம் பெறுவோம்.

**இயல் – 4**

**கல்வி அழகே அழகு**

**குறு வினா விடைகள்**

**1.யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவை இல்லை?**

கல்வி கற்றவர்

**சிறுவினா விடைகள்**

**1. நீதிநெறி விளக்கப் பாடல் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.**

- மணி அணிகலன்களுக்கு வேறு அணிகலன்கள் தேவையில்லை.
- அதுபோல கல்வி கற்றவருக்குக் கல்வியே அழகு.

**புத்தியைத் தீட்டு**

**குறு வினா விடைகள்**

**1.யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?**

மன்னிக்கத் தெரிந்த மனிதன்

**2.பகைவரிடம் நாம் நடந்து கொள்ள வேண்டிய முறை யாது?**

அன்பு காட்டுதல்

**சிறுவினா விடைகள்**

**1.புத்தியை தீட்டு வாழவேண்டிய முறைகளாக கவிஞர் கூறுவன யாவை?**

- திறமையைக் காட்ட வேண்டும்.
- அறிவுக்கு வேலை கொடுத்து, அமைதி காக்க வேண்டும்.
- பகைவரிடமும் அன்பு காட்ட வேண்டும்.
- மன்னிக்கும் உள்ளம் மாணிக்கக் கல் போன்றது.

**பல்துறைக்கல்வி**

**குறு வினா விடைகள்**

**1.இன்றைய கல்வியின் நிலை பற்றி திருவிக கூறுவன யாவை?**

- இக்காலத்தில் கல்வி பொருள் இல்லாமல் கிடைக்கிறது.
- மனப்பாடம் செய்து பட்டம் பெறுவது , அதன்மூலம் வேலைக்குச் செல்வது.

**2.தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?**

தாய்மொழி கொண்டு பிறக்கிறது.

**3.திரு.வி.க. சங்கப் புலவர்களாகக் குறிப்பிட்டுள்ளவர்களின் பெயர்களை எழுதுக.**

இளங்கோ, திருத்தக்கதேவர், ஆண்டாள் சேக்கிழார் ,கம்பர்

**சிறுவினா விடைகள்**

**1.தமிழ் வழி கல்வி பற்றி திரு. வி .க கூறுவனவற்றை எழுதுக.**

- அறிவு கலையைத் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும்.
- கலைகளை அனைத்தையும் தாய்மொழியில் கொண்டுவர வேண்டும்.

**2.அறிவியல் கல்வி பற்றி திரு .வி .க கூறுவன யாவை?**

அறிவியல் முக்கியமானது. உலகத்தோடு தொடர்பு கொள்ள அறிவியல் தேவை எனவே அதை இளைஞர்கள் கற்க வேண்டும்

**விரிவானம் – ஆன்ற குடிப்பிறத்தல்**

**1.திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.**

**முன்னுரை**

திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கிக்காண்போம்.

**சகாதேவன் கதை**

- துவைத்துப் போட்ட தலைமை ஆசிரியரின் வேட்டி காணாமல் போய்விட்டது.
- சிகாமணி திருடியதாக ஊரார் கூறினர்.
- ஆசிரியர் நடத்திய திருக்குறள் பாடத்தைக் கேட்டு சகாதேவன் தன் தந்தை திருடிய வேட்டியை கொடுத்து அனுப்புகிறான்.
- .ஊரார் சிகாமணியே தண்டிக்க சொல்கிறார்கள்.
- சகாதேவனுக்காக ஆசிரியர் மன்னிக்கிறார்.

**முடிவுரை**

திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையை அறிந்தோம்.

**வேற்றுமை**

**1.எழுவாய் வேற்றுமை விளக்குக.**

உருபுகள் இல்லாமல் எழுவாய் தனியாக நின்று பொருள் தருவது எழுவாய் வேற்றுமை. சான்று – கண்ணன் வந்தான்

**2.நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?**

கொடை, பகை ,,நட்பு ,தகுதி ,அதுவாதல், பொருட்டு ,முறை , எல்லை

**3.உடனிகழ்ச்சிப் பொருள் என்றால் என்ன?**

ஒடு ,ஓடு ஆகிய மூன்றாம் வேற்றுமை உருபுகள் உடனிகழ்ச்சிப் பொருளில் வரும்.

சான்று – தாயோடு குழந்தை சென்றது.

கட்டுரை : **நூலகம்**

**முன்னுரை**

நூலகத்தைப் பயன்படுத்தும் முன் நூலகத்தைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

**நூலகத்தின் தேவை**

பொழுதைப் பயனுள்ள வகையில் கழிக்கவும் நூல்களை இலவசமாகப் படிக்கவும் குறிப்பெடுக்கவும் நூலகம் தேவைப்பட்டது.

**வகைகள்**

- மாவட்ட மைய நூலகம்,
- மாவட்ட கிளை நூலகம்,
- ஊர்ப்புற நூலகம்
  - எனப் பலவகை நூலகங்கள் உள்ளன.

**நூலகத்தில் உள்ளவை**

கதை ,கவிதை, கட்டுரை , அறிவியல் நூல்கள், வார இதழ்கள் , மாத இதழ்கள் ஆகியவை நூலகத்தில் உள்ளன.

**படிக்கும் முறை**

- நூலகத்தில் நூல்களை எடுத்து அமைதியாகப் படிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் அமர்ந்து படிக்க வேண்டும்.
- நூல்களைக் கிழிக்கவோ, சேதப்படுத்துவதோ கூடாது .

**முடிவுரை**

நூலகம் தேடிச் சென்று, நாடி நூல்களைப் படிப்போம் உயர்வோம்.

**இயல் – 5**

**திருக்கேதாரம்**

**குறு வினா**

**1.தமிழ் இசையோடு இணைந்து இசைக்கும் இசைக் கருவிகளாக சுந்தரர் கூறுவன யாவை?**

புல்லாங்குழல் மற்றும் முழவு

**சிறுவினா**

**திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு பரணி வருணனை செய்கிறார்?**

- தமிழ்ப் பாடலுக்குப் புல்லாங்குழலும் முழவும் ஒலிக்கும்.
- நீர்நிலைகள் நீர் திவலைகளை வாரி இறைக்கும் .யானை மணிகளை வாரி வீசும்.

**பாடறிந்து ஒழுகுதல்**

**குறு வினா**

**1.பண்பு ,அன்பு ஆகியவை பற்றி கலித்தொகை கூறுவன யாவை?**

1.சான்றோர் வழி நடத்தல்

2.உறவினரோடு வெறுப்பில்லாமல் வாழ்தல்

**2.முறை ,பொறை என்பவற்றுக்கு கலித்தொகை கூறும் விளக்கம் யாது?**

- தவறு செய்தவருக்கு சரியான தண்டனை கொடுத்தல்.
- நம்மைத் திட்டுபவரையும் பொறுத்துக் கொள்ளுதல்.

**சிறுவினா**

**1.நமக்கு இருக்க வேண்டிய பண்புநலன்களாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக.**

- ஏழைக்கு உதவுதல்,அன்புள்ளவர்களைப் பிரியாது வாழ்தல்,
- அறிஞர் காட்டிய வழியில் நடத்தல்,வெறுப்பில்லாமல் உறவினர்களுடன் வாழ்தல்,
- அறிவற்றவர் சொல் பொறுத்தல்,சொன்ன வாக்குறுதியைக் காப்பாற்றல்,
- மறைபொருள் காத்தல்,குற்றம் செய்தவருக்குத் தண்டனை,திட்டுபவரைப் பொறுத்தல்.

**நாட்டுப்புறக் கைவினைக்கலைகள்**

**குறு வினா**

**1.எவற்றையெல்லாம் கைவினைக் கலைகள் என்று கூறுகிறோம்?**

மண் பொம்மை,மரப் பொம்மை ஆகியவை செய்தல்,மூங்கில் , பிரம்பு ,மணல் ஆகியவற்றின் மூலம் பொருள் செய்தல்.

**2.மண்பாண்டம் ,சுடுமண் சிற்பம் ஒப்பிடுக.**

- களிமண்ணை ஊறவைத்து சக்கரத்தில் வைத்து பொருள் செய்வது மண்பாண்டம்.
- களிமண்ணால் செய்த பொருள்களைச் சுட்டெரித்து செய்யப்படுபவை சுடுமண் சிற்பங்கள்.

**3..பனையோலையால் உருவாக்கப்படும் பொருட்கள் யாவை?**

கிளுகிளுப்பை , பொம்மை ,தொப்பி , கயிறு, கட்டில்.

**சிறுவினா**

**1.பிரம்பினால் பொருள்கள் செய்யும் முறையைக் கூறுக.**

பிரம்பை நெருப்பில் காட்டி ,சூடுபடுத்தி கம்பி போல வளைத்து ,பிறகு தேவையான பொருள் செய்யலாம்.

**2.மூங்கிலால் செய்யப்படும் பொருள்கள் குறித்து எழுதுக.**

தட்டு , கூடை ,முறம், ஏணி ,துடைப்பம் கட்டில்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**தமிழர் இசைக்கருவிகள்**

**காற்றுக் கருவிகள் குறித்து செய்திகளை தொகுத்து எழுதுக.**

**முன்னுரை**

காற்றுக் கருவிகள் குறித்து செய்திகளை தொகுத்துக் காண்போம்.

**காற்றுக் கருவிகள்**

1.காற்றைப் பயன்படுத்தி செய்யும் கருவிகள் காற்றுக் கருவிகள் ஆகும்.

2.புல்லாங்குழல் சங்கு கொம்பு ஆகியவை காற்றுக் கருவிகள்.புல்லாங்குழல் மூங்கில் சந்தனம் ஆகிய மரத்தால் செய்யப்படுகிறது.

3.கொம்பு இறந்த மாடுகளின் கொம்பை பயன்படுத்தி செய்யப்படுகிறது. திருவிழாவில் கொம்பை ஊதுவார்கள்.

4.கடலில் இருந்து கிடைப்பது சங்கு அதையும் இசைக்க பயன்படுத்துவார்கள்.

**முடிவுரை**

காற்றுக் கருவிகள் குறித்து அறிந்தோம்.

**தொகை மற்றும் தொகா நிலைத்தொடர்**

**1.தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

ஆறு வகைப்படும் .வேற்றுமைத்தொகை , வினைத்தொகை,பண்புத்தொகை,உம்மைத்தொகை, உவமைத்தொகை,அன்மொழித்தொகை முதலியன.

**2.இரவு பகல் என்பது எவ்வகை தொடர் என விளக்குக.**

உம்மைத்தொகை.உம் என்னும் இடைச்சொல் மறைந்து வந்ததால்

**திருக்குறள்**

**1.நன்மை தரும் செயலை ஒருவரிடம் ஒப்படைக்கும் வழியாது?**

செயலைச் சரியாக முடிப்பவரை ஆராய்ந்து ஒப்படைத்தல்.

**2.சிறந்த ஆட்சியின் பண்பாகத் திருவள்ளுவர் கூறுவது யாது?**

நடுவு நிலைமையில் ஆட்சி செய்தல்

**3.அரசின் தண்டிக்கும் முறை யாது?**

குற்றத்தை ஆராய்ந்து, குற்றம் மீண்டும் நடைபெறாது தண்டிப்பது.

**4.சிறந்த சொல்லாற்றல் கொண்டவாரின் இயல்பு என்ன?**

கேட்காத வரையும் கேட்க வைத்தல்

**கடிதம் எழுதுக.**

**இருப்பிடச்சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.**

**அனுப்புநர்**

\- - - - - - - -
18,திரு.வி.க.நகர்,
ஈரோடு -638001.

**பெறுநர்**

உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்
வட்டாட்சியர் அலுவலகம்,
ஈரோடு.

**மதிப்புக்குரிய அய்யா,**

**பொருள்: இருப்பிடச் சான்றிதழ் வேண்டுதல் சார்பாக.**

வணக்கம் .நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகின்றோம்.இருப்பிடச் சான்றிதழ் தேவைப்படுகின்றது. எனக்கு இருப்பிடச் சான்றிதழ் வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன். நன்றி!

**இடம் : ஈரோடு** **இப்படிக்குத்**
**நாள் - - -** **தங்கள்உண்மையுள்ள**
\- - - - - - - - - - - - - -

**உறைமேல் முகவரி**

**பெறுநர்**

உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஈரோடு.

**இயல் -6**

**வளம் பெருகுக**

**குறுவினா**

**1.பயிர்கள் வாட்டம் இன்றி கிளைத்து வளர தேவையானது எது?**

சரியான நேரத்தில் பெய்யும் மழை

**2.உழவர்கள் எப்போது ஆரவார ஒலி எழுப்புவர்?**

உழவர்கள் நெல்லைப் பிரித்து எடுக்கும் காலத்தில் ஆரவார ஒலி எழுப்புவர்.

**சிறுவினா**

**1.உழவுத் தொழில் பற்றி தகடூர் யாத்திரை கூறுவன யாவை?**

- மழையால் நெற்கதிர்கள் வளர்ந்துள்ளன.
- அதனை அறுவடை செய்து அடித்து நெல்லாக பிரித்து எடுக்கின்றனர்.
- அந்தச் சத்தம் கேட்டு நாரைகள் பிரிந்து செல்கின்றன.

**மழைச்சோறு**

**குறுவினா**

**1.மழைச் சோறு பாடலில் உழவர் படும் வேதனை எவ்வாறு சுட்டப்படுகிறது ?**

பயிர்களும் செடிகளும் வளரவில்லை குழந்தைகளின் பசியைப் போக்க முடியவில்லை.

**2.மக்கள் ஊரை விட்டு வெளியேற காரணம் என்ன?**

மழை இல்லாததால் , உழவுத் தொழில் செய்ய முடியாமல் வெளியேறுகின்றனர்.

**சிறுவினா**

**1.கோலம் கரையாத நிலையை மழைச்சோறு பாடல் எவ்வாறு விளக்குகின்றது?**

- ❖ வாளி மற்றும் பானையில் மாவைக் கரைத்து கோலம் போட்டனர்.
- ❖ அதை கரைக்க மழை வரவில்லை.

**2.மழையின்மையால் செடிகள் வாடிய நிலையை விளக்குக.**

கடலைச் செடி ,முருங்கை செடி, கருவேலம் ஆகியவை மழையில்லாமல் வளரவில்லை.

**3.மழைச் சோறு எடுத்து பின் எவ்வாறு மழை பெய்தது?**

பேய் மழையாக ஊரெல்லாம் பெய்தது.

**கொங்கு நாட்டு வணிகம்**

**1.மூவேந்தர்களின் காலம் குறித்து எழுதுக.**

பல நெடுங்காலத்திற்கு முன் தோன்றியவர்கள்.

**2.கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை**

காவிரி ,பவானி ,நொய்யல், அமராவதி.

**3.தமிழ்நாட்டின் ஹாலந்து என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?**

திண்டுக்கல். மலர் உற்பத்தியில் முதலிடம்

**சிறு வினா**

**1.கொங்கு மண்டல சதகம் கூறும் கொங்கு மண்டலத்தில் எல்லைகள் யாவை,**

1.பெரும்பாலை 2.பழனிமலை
3.வெள்ளிமலை 4.மதிற்கரை

**2.கரூர் மாவட்டம் பற்றிய செய்திகளை சுருக்கி எழுதுக.**

- ❖ கல்குவாரித் தொழிற்சாலை ,
- ❖ கைத்தறி நெசவு ஆடை தொழிற்சாலை ,
- ❖ பேருந்து கட்டுமானத் தொழில்.

**புணர்ச்சி**

**1.இயல்பு புணர்ச்சி எடுத்துக்காட்டு விளக்கு**

எவ்வித மாற்றமும் இல்லாமல் சேருவதை இயல்பு புணர்ச்சி ஆகும்.சான்று – தாய்மொழி

**2.மரக்கட்டில் – இச்சொல்லைப் பிரித்து எழுதிப் புணர்ச்சியை விளக்குக.**

கெடுதல் விகாரம் – மர கட்டில்

தோன்றல் விகாரம் – மரக்கட்டில்

**காலம் உடன் வரும்**

**காலம் உடன் வரும் கதையை சுருக்கி எழுதுக.**

**முன்னுரை**

காலம் உடன் வரும் கதையை சுருக்கிக் காண்போம்.

**காலம் உடன் வரும்**

1.அவசர வேலைக்காக சுப்பிரமணியம் பாவு இணைக்க ஆளைத் தேடுகிறார்.

2.நண்பர் ரகு அதற்கு உதவி செய்கிறார்.

3.ஒச்சம்மாவை பாவு இணைக்க சுப்பிரமணியம் அழைத்துச் செல்கிறார்.

4.சுப்ரமணியம் வேலை முடிந்ததும் ,அவளை வீட்டில் கொண்டு வந்து சேர்க்கிறார். இரட்டைச் சம்பளமும் தருகிறார்.

**முடிவுரை**

காலம் உடன் வரும் கதையை அறிந்தோம்.

**பொதுக்கட்டுரை :கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்**

**முன்னுரை**

கைத்தொழில் ஒன்றை கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை இக் கட்டுரை விளக்கும்.

**கைத்தொழில்**

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பார்கள் நாம் கற்கும் கல்வியும் நம் எதிர்காலத்திற்கு ஒரு தொழில் கற்றுக் கொடுக்கிறதா என்றால் இல்லை. வேலை தேடும் போது தான் தெரியும் .ஏதாவதுஒரு கைத்தொழிலாவது கற்று இருக்கலாமே என்று யோசிப்போம்.

**வகைகள்**

கைவினைப் பொருட்கள் செய்தல் ,மின்னணு சாதனங்கள் பழுது பார்த்தல், தட்டச்சு,கைபேசி பழுது பார்த்தல் எனபல வகைத்தொழில்கள்கைத்தொழிலில் உள்ளன.

**பயன்கள்**

வீட்டில் உள்ளபொருட்களை நாமே சரி செய்யலாம். கைத்தொழில்களை நாம் நன்கு கற்று பிறருக்கு அதனை கற்றுக் கொடுத்தும் பொருள் ஈட்டலாம்.

**முடிவுரை**

கைத்தொழில் கற்போம்.வளமாக வாழ்வோம்!

**இயல் -7**

**கவிதைப்பேழை - படை வேழம்**

**குறுவினா**

**1. சோழ வீரர்களைக் கண்டு கலிங்கர் எவ்வாறு நடுங்கினர்?**

உயிரைப் பறிக்க வந்த எமனோ என்று சோழ வீரர்களைக் கண்டு நடுங்கினர்.

**2. கலிங்க வீரர்கள் எவ்வாறு அஞ்சி ஓடினர்?**

தம்மை அழிக்க வந்த தீயோ என்று அஞ்சி ஓடினர்.

**3. சோழனின் யானைப் படையை கண்ட வீரர்களின் செயல்கள் யாவை?**

விலகி ஓடினர். கடலில் குதித்துத் தப்பினர். யானைகளின் பின்னே மறைந்து கொண்டனர். திசை தெரியாமல் மலைக் குகை மற்றும் புதருக்குள் தப்பி ஒழிந்து கொண்டனர்.

**சிறு வினா**

**சோழ வீரர்களைக் கண்ட கலிங்கப் படை வீரர்களின் செயல்களாகக் கலிங்கத்துப்பரணி கூறுவன யாவை?**

1. இதுஎன்ன மாய வித்தை என்று வியந்தனர். அழிக்க வந்த தீயோ என அஞ்சினர். உயிரைப் பறிக்க வந்த எமனோ என்று அஞ்சினர்.

2. படைக் கூட்டத்திலிருந்து விலகி ஓடினர். கடலில் குதித்து தப்பினர். யானைகள் பின்னே மறைந்து கொண்டனர். திசைதெரியாமல், குகை மற்றும் புதர்களில் ஓடி ஒழிந்தனர்.

3. நிழலைக் கூட எதிரிகள் துரத்தி வருவதாக எண்ணிப் பயந்தனர். யானை பிளிறியதைக்கேட்டு குகைக்குள் சென்று மறைந்தனர் . புறமுதுகு காட்டிப் பிழைத்தனர்.

**கவிதைப்பேழை - விடுதலைத்திருநாள்**

**குறுவினா**

**1. பகத்சிங் கண்ட கனவு யாது?**

இந்தியாவின் விடுதலை பற்றி பகத்சிங் கனவு கண்டார்.

**2. இருண்ட ஆட்சி என எதனை மீரா குறிப்பிடுகிறார்?**

அன்னியரின் ஆட்சியை இருண்ட ஆட்சி என்கிறார் மீரா.

**சிறு வினா**

**இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?**

இந்தியத்தாய் சினத்துடன் எழுந்து, கை விலங்கு உடைத்து, பகைவரை அழித்து , கூந்தலை முடித்து, தன் நெற்றியில் திலகம் இட்டு காட்சியளிக்கிறாள்.

**உரைநடை உலகம்**

**பாரதரத்னா. எம். ஜி. ராமச்சந்திரன்**

**குறுவினா**

**1. எம்ஜி. ஆர். நாடகத் துறையில் ஈடுபடக் காரணம் என்ன?**

எம். ஜி. ஆர். வறுமை காரணமாக நாடகத் துறையில் ஈடுபட்டார்.

**2. திரைத்துறையில் எம். ஜி. ஆரின் பன்முகத் திறமைகள் யாவை?**

நடிகர் , தயாரிப்பாளர் ,இயக்குனர்

**3. எம். ஜி. ஆரின் சமூக நலத்திட்டங்கள் நான்கினை எழுதுக.**

1. ஏழைகளுக்கான வீட்டுவசதித் திட்டம் 2. ஆதரவற்ற மகளிருக்கு திருமண உதவித் திட்டம் 3. தாய்சேய் நல இல்லங்கள் 4. பற்பொடி வழங்கும் திட்டம்

**சிறு வினா**

**1. பள்ளிக் குழந்தைகளுக்குக் காலணி வழங்கும் திட்டத்துக்கு அடிப்படையாக அமைந்த நிகழ்வை எழுதுக.**

ஒரு முறை மூதாட்டியும் பத்து வயதுச்சிறுமியும் காலணி இல்லாமல் தலையில் புல் கட்டுகளைச் சுமந்து சென்று கொண்டிருந்தனர் . சாலையின் சூடு தாங்காமல் மரநிழலில் நிற்பதும், ஓடுவதுமாக இருந்தனர். இதனைக் எம். ஜி. ஆர் மனைவி மற்றும் உறவினப்பெண்ணின் காலணியையும் கொடுத்துப் பணம் கொடுத்தார். இந்த நிகழ்ச்சியே பின்னர் பள்ளிக்கூடங்களில் காலணிகள் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த காரணமாயிற்று.

**2. தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக எம்ஜிஆர் ஆற்றிய பணிகள் யாவை?**

பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தங்கள் சிலவற்றை நடைமுறைப்படுத்தினார். மதுரையில்உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார் .தஞ்சையில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை நிறுவினார்.

### நெடுவினா

**எம். ஜி. ஆரின் பண்பு நலன்களை விளக்கி எழுதுக.**

1. நடிகர் ,தயாரிப்பாளர் ,இயக்குனர் எனப் பன்முக திறமை கொண்டவர் எம். ஜி. ஆர்.
2. நடித்த திரைப்படப் பாடல்கள் மூலம் உயரிய கருத்துக்களை மக்களிடம் விதைத்தார்.
3. வாழ்வின் உயர்ந்தாலும் எளிமையாக வாழ வேண்டும் என்பதைத் தன் பாடல்களில் கூறினார். அப்பாடலுக்கு ஏற்ப தாமும் வாழ்ந்தார்.
4. ஏழை மக்கள் காலில் காலணி கூட இல்லாமல் நடந்து செல்லும் நிகழ்ச்சி அவரது மனதை ஆழமாக பாதித்தது. அதனால் பின்னர் பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்கு இலவச காலணிகள் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.

## விரிவானம்

**அறிவுசால் ஔவையார் என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.**

**முன்னுரை**

போரை ஔவையார் எவ்வாறு தடுத்து நிறுத்தினார் என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

**அதியமான்**

அதியமான் ஒரு நாள் அதிசய நெல்லிக்கனி ஒன்றைப் பறித்து வந்து ஔவையாரை உண்ணச் செய்தார். நெல்லிக்கனியின் சிறப்பை அமைச்சர் மூலம் அறிந்த ஔவை. கவலை அடைந்தார். உங்களைப் போன்ற அறிவில் சிறந்த புலவர் மறைந்தால் ,அதை யாராலும் ஈடு செய்ய முடியாது. அதனால்தான் நெல்லிக்கனியை உண்ண செய்தேன் என்றார் அதியன்.

**போரை வெறுத்தல்**

போரினால் எத்தனையோ குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன. பலரின் கண்ணீர். போர் வேண்டாம் என்று நினைத்த நேரத்தில் , தொண்டைமான் போருக்கு அழைத்ததால் அதியமான் கவலையாக இருந்தார். இதனை ஔவையார் அறிகின்றார்.

**தொண்டைமானுக்குப் பாடம்**

ஔவையார் தொண்டைமானைப் பார்க்கச் சென்ற போது தன் நாட்டுப் போர்க்கருவிகளைக் காட்டினார் தொண்டைமான். அதற்கு ஔவையார் அதியமானின் போர்க்கருவிகள் இவ்வளவு அழகாக இல்லை. அடிக்கடி போர்புரிந்து படைக்கருவிகள் எல்லாம் இரத்தக்கறை படிந்தும் ,நுனி ஒடிந்தும் ,கூர்மை மழுங்கியும் கொல்லனின் உலைக்களத்தில் கிடைக்கின்றன என்றார். ஔவையார் கூறியதைக் இதியனின் வீரம் அறிந்து கேட்டு அதியனின் போர் திறமையை உணர்ந்து போரைத் தவித்து விட்டான்தொண்டைமான்.

**முடிவுரை**

தன் அறிவால் போரைக் கூடத் தடுக்கலாம் என்பதை இந்நாடகம் உணர்த்துகிறது.

### கற்கண்டு

### வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும்

**1. சந்திப்பிழை என்றால் என்ன?**

வல்லினம் மிக வேண்டிய இடத்தில் மிகாமலும் மிகக் கூடாத இடத்தில் வல்லின மெய்யிட்டு எழுதுவதும் தவறாகும். இதனைச் சந்திப்பிழை என்று கூறுவர்.

**2. வேற்றுமைகளில் வல்லினம் மிகும் இடங்களை எழுதுக.**

இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படையாக வரும் இடத்திலும், வல்லினம் மிகும். சான்று -தலையைக் காட்டு, எனக்குத் தெரியும்

**3. வல்லினம் மிகா தொடர்கள் ஐந்தினை எழுதுக.**

1. அது சென்றது. 2. காய் தின்றேன்.
3. இலைபறித்தேன். 4. எழுதாத பாடல்.
5. எழுதும்படி சொன்னேன்.

### கட்டுரை

**நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு**

**முன்னுரை**

நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு என்ன என்பதைக் காண்போம்.

**இளைஞர்களின் திறமை**

இன்றைய இளைஞர்கள் தனித்திறமை வாய்ந்தவர்களாக இருக்கின்றனர். எனவேதான் அன்று விவேகானந்தரும் அப்துல் கலாமும் நம் நாட்டு இளைஞர்களின் கையில்தான் நம் நாட்டின் எதிர்காலம் உள்ளது என்று கூறினர்.

**இளைஞர்களின் செயல்பாடு**

இராணுவத்தில் நம்மையும் நம் நாட்டையும் இளைஞர்கள் பாதுகாத்து வருகின்றனர். தகவல் தொழில்நுட்பத் துறையில் எண்ணற்ற புரட்சியினை ஏற்படுத்தி வருகின்றனர். இதன் மூலம் பொருளாதார முன்னேற்றம் அடைந்து நாட்டின் வளர்ச்சி மேலோங்கி நிற்கிறது.

**உழவுத்தொழில் முன்னேற்றம்**

நவீன செயல்பாடுகளை நம்நாட்டு வேளாண்மைத் துறை மாணவர்கள் செய்துள்ளனர். வேளாண் பெருக்கத்திற்கு உரிய வழிவகைகளை நம் இளைஞர்கள் தங்கள் ஆய்வின் மூலம் செய்துகாட்டி விளைச்சலைப் பெருக்கி உள்ளனர்.

**முடிவுரை**

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் என்பது உண்மையே!

### இயல்-8

### கவிதைப்பேழை -ஒன்றே குலம்

### குறுவினா

**1. யாருக்கு எமனைப் பற்றி அச்சமில்லை?**

ஒரே இனம் ஒரே இறைவன் என்று நினைப்பவனுக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை.

**2. மக்களின் உள்ளத்தில் நிலை பெற்று வாழ விரும்புபவர் செய்ய வேண்டியது யாது?**

ஒரே இனம், இறைவன் ஒருவனே என்பதை ஏற்றல் , ஏழை மக்களுக்குக் காணிக்கை கொடுத்தல் ஆகியவற்றைச் செய்ய வேண்டும்.

**சிறு வினா**

**மக்களுக்குச் செய்ய வேண்டிய தொண்டு குறித்து திருமூலர் கூறுவது யாது?**

படங்கள் அமைந்த கோயில் இறைவனுக்கு காணிக்கையாகச் செலுத்தினால், அப்பொருள் நடமாடும் கோயில் ஏழைகளுக்குச் சேராது. ஆகையால் ஏழைகளுக்குக் கொடுப்பது கோயிலில் இருக்கும் இறைவனுக்குக் கொடுப்பதைப் போன்றதாகும்.

**கவிதைப்பேழை -மெய்ஞான ஒளி**

**குறுவினா**

**1. உண்மை அறிவை உணர்ந்தோர் உள்ளத்தில் நிகழ்வது யாது?**

உண்மை அறிவை உணர்ந்தோர், உள்ளத்தில் இன்பம்பெருகி, கரை கடந்து பொங்கிடும் கடலாக, மேலான பரம்பொருள் விளங்கின்றது.

**2. மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைவது யாது?**

இறைவன் மீது பற்று வைக்காமல் பணத்தின் மீது ஆசை வைத்தால் மனிதனின் மனம் கலங்கும்.

**சிறு வினா**

**1. குணங்குடியார் பராபரத்திடம் வேண்டுவன யாவை?**

அறிவு ஒளியானவனே! பணத்தின் மீது ஆசை வைத்ததால், நான் மனம் கலங்கி அலைகின்றேன். உன்னை உணர்ந்தவர்களின் உள்ளத்திற்குள் இன்பக்கடலாக விளங்கி நிற்கின்றாய்!

மேலான பொருளே! ஐம்பொறிகளின் இயல்பை உணர்ந்து நல்வழிப்படுத்தும் அறிவினை எனக்குத் தந்து, அருள் செய்வாயாக!

**உரைநடைஉலகம்**

**அயோத்திதாசர் சிந்தனைகள்**

**குறுவினா**

**1. அயோத்திதாசரிடமிருந்த ஐந்து பண்புகள் யாவை?**

1. நல்ல சிந்தனை 2. சிறப்பான செயல் 3. உயர்வான பேச்சு 4. உவப்பான எழுத்து 5. பாராட்டத்தக்க உழைப்பு

**2. ஒரு சிறந்த வழிகாட்டி எவ்வாறு இருக்க வேண்டும் என அயோத்திதாசர் கூறுகிறார்?**

ஒரு சிறந்த வழிகாட்டி மக்களுள் மாமனிதராக, அறிவாற்றல் பெற்றவராக ,நன்னெறியைக் கடைப்பிடிப்பவராக இருக்க வேண்டும்.

**3. திராவிட மகாஜன சங்கம் எவற்றுக்காகப் போராடியது?**

ஒடுக்கப்பட்டோர் நலன், சாலைகள் அமைத்தல் ,கால்வாய்கள் பராமரித்தல், பொது மருத்துவமனைகள் அமைத்தல் ,சிற்றூர்கள்தோறும் கல்விக்கூடங்கள் ஏற்படுத்துதல் ஆகியவற்றிற்காகப் திராவிட மகாஜன சங்கம் போராடியது.

**சிறு வினா**

**1. அயோத்திதாசரின் இதழ்ப்பணி பற்றி எழுதுக.**

அயோத்திதாசர் ஒரு பைசாத்தமிழன் என்னும் வார இதழைக் காலணாவிலையில் தொடங்கினார். ஓராண்டிற்குப் பிறகு அதன் பெயரைத் தமிழன் என மாற்றினார். மக்களுக்கு நீதி, நேர்மை ,சரியான பாதை ஆகியவற்றைத் தெளிவு படுத்துவதே ,இந்த இதழின் நோக்கம் என்று அயோத்திதாசர் குறிப்பிட்டார்.

**2. அரசியல் விடுதலை பற்றிய அயோத்திதாசரின் கருத்துகள் யாவை**

விடுதலை என்பது வெறும் ஆட்சி மாற்றம் மட்டும் அன்று. அது மக்களின் வாழ்க்கையில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்துவதாக அமைய வேண்டும் என்பது அயோத்திதாசர் கருத்து. சுய ராஜ்ஜியத்தின் நோக்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாக மட்டுமே இருக்கக் கூடாது.

மக்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியையும் உள்ளடக்கியதாக அது அமைய வேண்டும்.

**நெடுவினா.**

**வாழும்முறை ,சமத்துவம் ஆகியன பற்றிய அயோத்திதாசரின் சிந்தனைகளைத் தொகுத்து எழுதுக.**

**வாழும் முறை**

அன்பு கொண்டு வாழ வேண்டும். கோபம் , பொறாமை , பொய் ,களவு போன்றவற்றை நீக்கி வாழ வேண்டும். பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யக்கூடாது. போதைப் பொருள்களைப் பயன்படுத்தக் கூடாது.

**சமத்துவம்**

அயோத்திதாசர் மக்கள் அனைவரும் சம உரிமை பெற்று சமத்துவமாக வாழ வேண்டும் என்று விரும்பினார். கல்வி ,வேளாண்மை, காவல்துறை போன்ற அனைத்துத் துறைகளிலும் மக்கள் அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்க வேண்டும்.

ஊராட்சி, நகராட்சி, சட்டமன்றம், நாடாளுமன்றம் ஆகியவற்றில் எல்லா வகுப்பினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.

**விரிவானம் - மனித எந்திரம்**

**மனித எந்திரம் கதையை மீனாட்சிசுந்தரம் கூறுவதாக மாற்றி எழுதுக.**

**முன்னுரை**

புதுமைப்பித்தன் எழுதிய கதை மனித எந்திரம் ஆகும். அதனை இனிக் காண்போம்.

**மீனாட்சி சுந்தரம்**

மீனாட்சிசுந்தரம் எழுத்தர் வேலை செய்பவர் . 45 வருடங்களாக ஒரே கடையில் வேலை செய்கிறார் . சம்பளம் மாதத்திற்கு 20 ரூபாய். அவரைப் பார்த்தாலே அனைவருக்கும் பழுதுபடாத எந்திரம் தான் ஞாபகத்திற்கு வரும்.

**ஆசை**

மாடும் கன்றும் வாங்கவேண்டும். நிலத்தைத் திருப்ப வேண்டும். ஒருமுறை கொழும்புக்குப் போய் விட்டு தங்க அரைஞாண் , கடிகாரச் சங்கிலி ,கையில் பணம் போன்றவற்றுடன் மீண்டும் ஊருக்கு திரும்ப வேண்டும். தெருவில் எதிரிலே வருகிறவர்கள் எல்லாரும் துண்டை இடுப்பில் கட்டி அண்ணாச்சி சவுக்கியமா? என்று கேட்க வேண்டும். இதுதான் மீனாட்சி சுந்தரத்தின் ஆசை

**நேர்மை தவறுதல்**

கடைப் பணப் பெட்டியில் உள்ள பணத்தைத் திருடிச் சென்று விட முடிவு செய்தார். நாற்பது ரூபாயும் சில்லறையும் இருந்ததை எடுத்துக் கொண்டு கடையைப் பூட்டிவிட்டுச் சென்றார் மீனாட்சி சுந்தரம்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**அச்சம்**

மீனாட்சிசுந்தரம் ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து தூத்துக்குடி வண்டியில் ஏறி அமர்ந்தார். திருடிய பயத்தில் வியர்வை பூத்து பயத்துடன் இருந்தார். அந்த நேரத்தில் ரயில்வே போலீஸ் நண்பர் கல்யாணசுந்தரம் மீனாட்சி சுந்தரத்தைக் கூப்பிட்டார். திருடிய பயத்தில் தூத்துக்குடி செல்வதாகக்கூறினார். காலை விடிந்தவுடன் எல்லா விஷயமும் ஊராருக்குத் தெரிந்துவிடும். கல்யாண சுந்தரமும் நான் தூத்துக்குடி சென்றுள்ளதைச் சொல்லிவிடுவான் .எனவே ,பயத்தில் மனமாற்றம் அடைந்தான். முதலாளி ஐயா வீட்டிற்குச் சென்று சம்பளம் எடுத்துக் கொண்டதைச் சொல்லி விட்டுச் சென்றார்.

**முடிவுரை**

மனம் ஆசையைத் தூண்டினாலும் அச்சம் அவன் மனதை மாற்றியது என்பதை இக்கதை மூலம் அறியமுடிகின்றது.

**கற்கண்டு: யாப்பிலக்கணம்**

**சிறு வினா**

**1. இருவகை அசைகளையும் விளக்குக.**

நேரசை : குறில் அல்லது நெடில் எழுத்து தனித்து வந்தாலும் உடன் சேர்ந்து வந்தாலும் நேரசை ஆகும். எ.கா. ந ,நம், நா, நாம்

நிரையசை :இரண்டு குறில் எழுத்துகள் அல்லது குறில் நெடில் எழுத்துகள் இணைந்து வந்தாலும் அவற்றுடன் ஒற்றெழுத்து சேர்ந்து வந்தாலும் நிரையசை ஆகும். எ.கா. கட,கடல், கடா ,கடாம்

**2. தளை என்பது யாது?**

சீர்கள் ஒன்றோடு ஒன்று பொருந்துவதைத் தளை என்பர்.

**3. அந்தாதி என்றால் என்ன?**

ஒரு பாடலின் இறுதியில் அல்லது அடியின் இறுதிப்பகுதி அடுத்த பாடலின் முதல் சீர் அல்லது அடியின் முதலில் வருமாறு பாடப்படுவது அந்தாதித் தொடை ஆகும்.

**4. பா எத்தனை வகைப்படும் ?அவை யாவை?**

பா நான்கு வகைப்படும்.

வெண்பா ,ஆசிரியப்பா ,கலிப்பா ,வஞ்சிப்பா

**கடிதம்**

**புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக**

**உறவுமுறை கடிதம்**

**27,தமிழ்நகர்,**
**இஇஇ.**

**நாள்:---------------**

**அன்புள்ள மாமாவுக்கு,**

முருகன் எழுதும் கடிதம்.நலம் நலம் அறிய ஆவல்.நூலகத்தில் வைத்திருந்த கல்கியின் பார்த்திபன் கனவு என்ற நூலில் சில பக்கங்களைப் படித்தேன்.மிகவும் பிடித்திருந்தது.இந்நூலை முழுமையாகப் படிக்க விரும்புகின்றேன். ஈரோட்டில் அந்நூல் கிடைக்கவில்லை. எனவே அங்குள்ள புத்தக அங்காடியில் அந்நூலை வாங்கி எனக்கு அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**இப்படிக்கு அன்புள்ள,**
**முருகன்**

**உறைமேல் முகவரி**

**பெறுநர்**

ச.குமார்,
40 ,செம்மொழி நகர்
சென்னை - 3

**வாழ்வியல்- திருக்குறள்**

**குறுவினா**

**1. எது பெருமையைத் தரும்?**

காட்டு முயலை வீழ்த்திய அம்பினை ஏந்துவதை விட, யானைக்குக் குறிவைத்து தவறிய வேலை ஏந்துதல் பெருமை தரும்.

**2. நண்பர்களில் நண்பர்களின் இயல்பை அளந்து காட்டும் அளவுகோல் எது?**

துன்பமே நமது நண்பர்களின் உண்மையான இயல்பை அளந்து காட்டும் அளவுகோலாகும்.

**3. இவ்வுலகம் யாரால் இயங்குவதாகத் திருக்குறள் கூறுகிறது?**

பண்புடைய சான்றோர்களால், இந்த உலகம் இயங்குவதாக திருக்குறள் கூறுகிறது.

**4. நட்பு எதற்கு உரியது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?**

நட்பு என்பது சிரித்து பேசி மகிழ்வதற்கு மட்டும் உரியதன்று. நண்பர் தவறு செய்தால் அவரைக். கண்டித்து திருத்துவதும் உரியது.

**இயல்-9**

**கவிதைப்பேழை :உயிர்க்குணங்கள்**

**குறுவினா**

**1. மனிதர்களின் பொதுஇயல்பாகக் கன்னிப்பாவை நூல் கூறுவது யாது?**

சினம் ,கருணை ,ஆசை, அச்சம், அன்பு, இரக்கம், சினம், ஞானம் ,மேன்மை, பொறாமை, எளிமை ஆகியவை மனிதர்களின் பொது இயல்புகள் ஆகும்.

**2. மனிதர்களிடம் உள்ள பண்புகளாகக் கன்னிப் பாவை நூல் கூறுவனவற்றுள் நற்பண்புகள் யாவை?**

அறிவு ,கருணை ,அன்பு ,இரக்கம், மேன்மை, எளிமை , பொறுமை ,அறம் , வெற்றி ,ஆராய்ந்து தெளிதல் ஆகியனவாகும்.

**சிறு வினா**

**1. மனிதர்களிடம் குவிந்திருக்கும் பண்புகளாகக் கன்னிப்பாவை நூல் கூறுவன யாவை?**

சினம் ,கருணை ,ஆசை, அச்சம், அன்பு, இரக்கம், சினம், ஞானம் ,மேன்மை, பொறாமை, எளிமை ஆகியவை மனிதர்களின் பொது இயல்புகள் ஆகும்.

**கவிதைப்பேழை - இளைய தோழனுக்கு**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

**குறுவினா**

**1. கவலைகளைக் கவிஞர் எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?**

கவலைகளைக் கவிஞர் கைக்குழந்தைகளாக உருவகப்படுத்துகிறார்.

**2. தோல்வி எப்போது தூண்டுகோலாகும்?**

நெய்யாகவும் திரியாகவும் நீ மாறினால் தோல்வியும் உனக்குத் தூண்டுகோலாகும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**சிறு வினா**

**பூமி எப்போது பாதையாகும்?**

- ❖ நீ சோர்ந்து தளர்ந்தால் பூமி உன் நோய்ப் படுக்கையாகும்.
- ❖ நீ பிடித்து நடந்தால் அந்த பூமியே உனக்குப் பாதையாகும்.

**உரைநடை உலகம் -சட்டமேதை அம்பேத்கர்**

**குறுவினா**

**1. அம்பேத்கர் தன் பெயரை ஏன் மாற்றிக் கொண்டார்?**

மகாதேவ் அம்பேத்கர் என்ற ஆசிரியர் பீமாராவ் மீது அன்பும் அக்கறையும் காட்டியதால் பீமாராவ் என்னும் தம் பெயரை அம்பேத்கர் என்று மாற்றிக்கொண்டார்.

**2. தீண்டாமைக்கு எதிராக அம்பேத்கர் மேற்கொண்ட பணிகள் இரண்டினை எழுதுக.**

தீண்டாமைக்கு எதிராக ,ஒடுக்கப்பட்ட பாரதம் என்னும் இதழைத் தொடங்கினார். மேலும் நாசிக் கோயில் நுழைவுப் போராட்டத்தை நடத்தி வெற்றி கண்டார்.

**3. வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளும் முன் அம்பேத்கர் கூறியது யாது?**

என் மக்களுக்கு நியாயமாக என்ன கிடைக்க வேண்டுமோ, அதற்காகப் போராடுவேன், அதே சமயத்தில் சுயராஜ்ய கோரிக்கைகளை முழு மனதுடன் ஆதரிப்பேன் என்றார்.

**சிறு வினா**

**1. இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக அம்பேத்கர் ஆற்றிய பணிகள் யாவை?**

- ❖ மக்கள் ஆட்சி நடைபெற்ற நாடுகள் பலவற்றில் இருந்து இந்திய நடைமுறைக்குப் பொருந்தும்
- ❖ சட்டக் கூறுகளையும் இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்கா , அயர்லாந்து முதலிய நாடுகளின் சட்டங்களையும் ஆராய்ந்து இந்திய நாட்டிற்கான சட்டத்தை அம்பேத்கர்உருவாக்கினார்.

**2. அம்பேத்கரின் முதல் தேர்தல் வெற்றி குறித்து எழுதுக.**

- ❖ 1935 ல் ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோர் நலனைப் பாதுகாக்க தேர்தலில் போட்டியிட அம்பேத்கர் விரும்பினார்.
- ❖ சுதந்திர தொழிலாளர் கட்சியைத் தொடங்கி தேர்தலில் போட்டியிட்டார்.
- ❖ அவர் வெற்றி பெற்றதுடன் அவரின் கட்சி வேட்பாளர்கள் 15 பேரையும் வெற்றி பெறச் செய்தார்.

**நெடுவினா**

**பூனா ஒப்பந்தம் பற்றி எழுதுக.**

- ➢ இந்தியர்களுக்கு இரட்டை வாக்குரிமை வழங்கப்பட்டது.
- ➢ ஆனால் இதை ஏற்க மறுத்த காந்தியடிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டார் இதன் விளைவாக 24.9. 1931ல் காந்தியடிகளும் அம்பேத்கரும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனர்.
- ➢ அதன்படி ஒடுக்கப்பட்டோருக்குத் தனி வாக்குரிமை என்பதற்குப் பதிலாக பொது வாக்கெடுப்பில் தனித்தொகுதி வழங்குவது என முடிவு செய்யப்பட்டது.
- ➢ இந்த ஒப்பந்தமே பூனா ஒப்பந்தம் எனப்பட்டது.

**விரிவானம் :பால்மனம்**

**குழந்தை கிருஷ்ணாவின் பண்பு நலன்களைப் பற்றித் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை**

குழந்தை கிருஷ்ணாவின் பண்புகளை இனி காண்போம்.

**குழந்தை கிருஷ்ணா**

- ❖ ராமுவின் அண்ணன் மகள் கிருஷ்ணா.
- ❖ தெருவில் கீரை கொண்டு வரும் பாட்டி, கைவண்டி இழுத்து வருபவர் ஆகியோர் மீது இரக்கப்படுகின்றாள்.
- ❖ தன் தம்பிக்காக வைத்திருந்த பாலை எடுத்து கிருஷ்ணா ஆட்டுக்குட்டிக்குப் புகட்டுகிறாள்.
- ❖ அம்மா என்ன மகள் இப்படி இருக்கிறாளே என்று புலம்புகிறார்.
- ❖ ராமு கிருஷ்ணாவின் மனிதநேயத்தைக் கண்டு வியக்கிறார்.

**மாற்றம்**

ராமு படித்து முடித்துவிட்டு வேலைக்கு சென்று , ஐந்து ஆண்டுகள் கழித்து மீண்டும் திரும்புகிறார். இப்போது கிருஷ்ணாவிற்கு எட்டு வயது. அண்ணன் அண்ணியால் கிருஷ்ணா முற்றிலுமாக மாறி விட்டாள். சித்தப்பா , தம்பி தெரு நாய்க்குப் பால் சாதத்தைப் போடுகிறான் பாருங்க ,டாமிக்கு தான் போடனும் என்கிறது .பிறகு ஆட்டுக்குட்டி மீது கல்லெடுத்து வீசுகிறாள். சாலை வேலை செய்யும் கூலியாள் தண்ணீர் கேட்டவுடன் கொடுக்க மறுக்கிறாள். கிருஷ்ணாவின் மன மாற்றத்தை ராமு உணர்கிறார்.

**முடிவுரை**

நல்லவர்களையும் இந்தச் சமுதாயம் மாற்றி விடும்.

**கற்கண்டு - அணியிலக்கணம்**

**சிறு வினா**

**1. பிறிதுமொழிதல் அணியை விளக்கி எடுத்துக்காட்டு தருக.**

**இலக்கணம்:**

உவமையை மட்டும்கூறி பொருளைப் பெற வைப்பது பிறிதுமொழிதல் அணி ஆகும்.

**சான்று:**

கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து.

**விளக்கம்**

தேர் கடலில் ஓடாது, கப்பல் நிலத்தில் ஓடாது என்ற உவமையை மட்டும் கூறி ,எதுவும் தமக்குரிய இடத்தில் இருப்பதே நல்லது என்ற பொருளைப் பெற வைத்ததால், இது பிறிதுமொழிதல் அணி ஆயிற்று.

**2. வேற்றுமை அணி என்றால் என்ன?**

இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கூறி பிறகு அவற்றுள் ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை அணி எனப்படும்.

**3. இரட்டுறமொழிதல் அணி எவ்வாறு பொருள் தரும்?**

ஒரு சொல் அல்லது தொடர் இரு பொருள் தருமாறு அமைவது இரட்டுறமொழிதல் ஆகும்.

சான்று- தாமரை

விளக்கம்: தாமரை -ஒருவகை மலர், தாவும்மான்.

**கட்டுரை : "உழைப்பே உயர்வு"**

**முன்னுரை**

உழைப்பே உயர்வு தரும் என்பத பற்றி இனிக் காண்போம்.

**உழைப்பு**

இறைவனால் முடியாத காரியம் கூட உழைப்பாலும் முயற்சியாலும் செய்ய முடியும் என்கிறது திருக்குறள். உழைப்பால் உடலும் உள்ளமும் வலுப்பெறுகிறது.

**உழைப்பே உயர்வு**

- ❖ உழைப்பே உயர்வு தரும் என்பது பழமொழி. விலங்குகளும் பறவைகளும் தமக்குத் தேவையான உணவை தாமே உழைத்து தேடிப் பெற்றுக்கொள்கின்றன.
- ❖ உழைப்பில்லாமல் வரும் செல்வத்தை விட்டுவிட்டு உண்மையான உழைப்பால் வரும் செல்வத்தை நாம் அனுபவிக்க வேண்டும்.

**உழைப்பால் சிறந்தவர்கள்**

எடிசன், ஐன்ஸ்டின், ஜி.டி. நாயுடு, டாக்டர் அப்துல் கலாம் ஆகிய எண்ணற்ற அறிஞர்கள் தம்முடைய கடின உழைப்பால் வாழ்வில் முன்னேறி இருக்கிறார்கள் என்பதை அவர்களின் வாழ்க்கை வரலாறு நமக்கு உணர்த்துகிறது.

**முடிவுரை**

அனைவரும் நல்வழியில் கடின உழைப்பு செய்து வாழ்வில் முன்னேற வேண்டும்.

---

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**இயல் -1**

**தமிழ்மொழி வாழ்த்து**

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ______. அ) வைப்பு

2. 'என்றென்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________. ஆ) என்று + என்றும்

3. 'வானமளந்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________. இ) வானம் + அளந்தது

4. அறிந்தது + அனைத்தும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______. இ) அறிந்ததனைத்தும்

5. வானம் + அறிந்த என்பதனை ச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______. இ) வானமறிந்த

**தமிழ் மொழி மரபு**

1. பறவைகள் _____பறந்து செல்கின்றன. ஆ) விசும்பில்

2. இயற்கையைப் போற்றுதல் தமிழர் ___________.

அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு

3. 'இருதிணை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ___________. அ) இரண்டு + திணை

4. 'ஐம்பால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ஆ) ஐந்து + பால்

**உரைநடை -தமிழ் வரிவடிவ வளர்ச்சி**

1. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ______ காரணமாக அமைந்தது. இ) அச்சுக்கலை

2. வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து ________ என அழைக்கப்படுகிறது. ஆ) வட்டெழுத்து

3. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ______. ஆ) தந்தை பெரியார்

**கற்கண்டு - எழுத்துகளின் பிறப்பு**

1. இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் ______. ஆ) உ, ஊ

2. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் _______. இ) தலை

3. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் ______. ஆ) மார்பு

4. நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள் இ) ட், ண்

5. கீழ்இதழும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து ______. ஈ) வ்

**இயல்-2**

**ஓடை**

1. பள்ளிக்குச் சென்று கல்வி ___________ சிறப்பு. அ) பயிலுதல்

2. செஞ்சொல் மாதரின் வள்ளைப்பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது _________. ஆ) ஓடை

3. 'நன்செய்' – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________. இ) நன்மை + செய்

4. 'நீளுழைப்பு' – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________. ஈ) நீள் + உழைப்பு

5. சீருக்கு + ஏற்ப – என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ____________. ஆ) சீருக்கேற்ப

6. ஒடை + ஆட – என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ____________. ஆ) ஓடையாட

கோணக்காத்துப் பாட்டு

1. வானில் கரு ______ தோன்றினால் மழை பொழியும் என்பர். அ) முகில்

2. முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் ______யும் ஓட்டிவிடும். ஆ) காலனை

3. 'விழுந்ததங்கே ' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______. இ) விழுந்தது + அங்கே

4. 'செத்திறந்த' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______. ஈ) செத்து + இறந்த

5. பருத்தி + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______. ஆ) பருத்தியெல்லாம்

உரைநடை - நிலம் பொது

1. செவ்விந்தியர்கள் நிலத்தைத் ______ மதிக்கின்றனர். அ)தாயாக

2. 'இன்னோசை ' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______. இ) இனிமை + ஓசை

3. பால் + ஊறும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______. ஆ) பாலூறும்

கற்கண்டு - வினைமுற்று

1. மாடு வயலில் புல்லை மேய்ந்தது. - இத்தொடரிலுள்ள வினைமுற்று ______. ஈ) மேய்ந்தது

2. பின்வருவனவற்றுள் இறந்தகால வினைமுற்று ______. அ) படித்தான்

3. பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல் ______. அ) செல்க

திருக்குறள்

1. புகழாலும் பழியாலும் அறியப்படுவது ____இ) நடுவுநிலைமை

2. பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் ஆ) கல்லாதவர்

3. 'வல்லுருவம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______. ஆ) வன்மை + உருவம்

4. நெடுமை + தேர் என்பதனைச் சேர்தெழுதக் கிடைக்கும் சொல் ______. இ) நெடுந்தேர்

5. 'வருமுன்னர்' எனத் தொடங்கும் குறளில் பயின்று வந்துள்ள அணி ______. இ) உவமை அணி

இயல் -3

நோயும் மருந்தும்

1. உடல்நலம் என்பது ________ இல்லாமல் வாழ்தல் ஆகும். இ) பிணி

2. நீலகேசி கூறும் நோயின் வகைகள் ________.ஆ) மூன்று

3. 'இவையுண்டார்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________. இ) இவை + உண்டார்

4. தாம் + இனி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ________. இ) தாமினி

வருமுன் காப்போம்

1. காந்தியடிகள் ______ போற்ற வாழ்ந்தார். ஆ) வையம்

2. 'நலமெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______. அ) நலம் + எல்லாம்

3. இடம் + எங்கும் என்பதனை ச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______. இ) இடமெங்கும்

உரைநடை-தமிழர் மருத்துவம்

1. தொடக்க காலத்தில் மனிதர்கள் மருத்துவத்திற்குத் ______ பயன்படுத்தினர். அ) தாவரங்களை

2. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது ______ நீட்சியாகவே உள்ளது. இ) உணவின்

3. உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று ______. ஈ) இரத்தக் கொதிப்பு

4. சமையலறையில் செலவிடும் நேரம் ______ செலவிடும் நேரமாகும். இ) நல்வாழ்வுக்காக

கற்கண்டு - எச்சம்

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் ______ எனப்படும். ஆ) எச்சம்

2. கீழ்க்காணும் சொற்களில் பெயரெச்சம் ______. ஈ) பார்த்த

3. குறிப்பு வினையெச்சம் ______ வெளிப்படையாகக் காட்டாது. அ) காலத்தை

இயல்-4

கல்வி அழகே அழகு

1. கற்றவருக்கு அழகு தருவது _________. ஈ) கல்வி

2. 'கலனல்லால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________. ஆ) கலம் + அல்லால்

புத்தியைத் தீட்டு

1. என் நண்பர் பெரும் புலவராக இருந்தபோதும் ______ இன்றி வாழ்ந்தார். இ) வருத்தம்

2. 'கோயிலப்பா ' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______. இ) கோயில் + அப்பா

3. பகைவன் + என்றாலும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______. ஆ) பகைவனென்றாலும்

உரைநடை - பல்துறைக் கல்வி

1. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது ___.ஆ) கல்வி

2. கல்விப் பயிற்சிக்குரிய பருவம் _______. அ) இளமை

3. இன்றைய கல்வி ______ நுழைவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது. ஈ) தொழிலில்

கற்கண்டு-வேற்றுமை

1. பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது__________ ஆகும். ஈ) வேற்றுமை

2. எட்டாம் வேற்றுமை ____________ வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது. இ) விளி

3. உடனிகழ்ச்சிப் பொருளில் ______________ வேற்றுமை வரும். அ) மூன்றாம்

4. 'அறத்தான் வருவதே இன்பம்' - இத்தொடரில் _________ வேற்றுமை பயின்று வந்துள்ளது. ஆ) மூன்றாம்

5. 'மலர் பானையை வனைந்தாள்' – இத்தொடர் ________ பொருளைக் குறிக்கிறது. அ) ஆக்கல்

இயல்-5

திருக்கேதாரம்

1. காட்டிலிருந்து வந்த _____கரும்பைத் தின்றன.ஆ) முழவுகள்

2. 'கனகச்சுனை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______. இ) கனகம் + சுனை

3. முழவு + அதிர என்பதனை ச் சேர்த்தெழுதக் கிடைக்கும் \சொல் ______. இ) முழவதிர

பாடறிந்து ஒழுகுதல்

1. பசியால் வாடும் ______ உணவளித்தல் நமது கடமை. ஆ) அலந்தவர்க்கு

2. நம்மை _ப் பொறுத்துக் கொள்ள வேண்டும். அ) இகழ்வாரை

3. மறைபொருளைக் காத்தல் ______ எனப்படும். ஈ) நிறை

4. 'பாடறிந்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது இ) பாடு + அறிந்து

5. முறை + எனப்படுவது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______. ஆ) முறையெனப்படுவது

உரைநடை -நாட்டுப்புறக் கைவினைகள்

1. பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை இ) பனையோலைகள்

2. பானை_______ ஒரு சிறந்த கலையாகும். ஆ) வனைதல்

3. 'மட்டுமல்ல' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ஈ) மட்டும் + அல்ல

4. கயிறு + கட்டில் என்பதனை ச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______. அ) கயிற்றுக்கட்டில்

தொகைநிலை,தொகாநிலைத் தொடர்

1. சொற்களுக்கு இடையே வேற்றுமை உருபு மறைந்து வருவது அ) வேற்றுமைத்தொகை

2. 'செம்மரம்' என்னும் சொல் ______த்தொகை. ஆ) பண்பு

3. 'கண்ணா வா!'- என்பது ______த் தொடர். ஆ) விளி

திருக்குறள்

1. அரசரை அவரது ______ காப்பாற்றும். இ) குற்றமற்ற ஆட்சி

2. சொல்வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் ______ தகுதி அறிந்து பேச வேண்டும். ஆ) அவையின்

3. 'கண்ணோடாது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______. அ) கண் + ஓடாது

4. 'கசடற' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ஈ) கசடு + அற

5. என்று + ஆய்ந்து என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______. அ) என்றாய்ந்து

இயல்-6

வளம் பெருகுக

1. தோட்டத்தில் தம்பி ஊன்றிய ___________ எல்லாம் முளைத்தன. ஈ) வித்துகள்

2. என் நண்பன் செய்த தொழிலில் அவனுக்கு _____________ பெருகிற்று. இ)வாரி

3. 'அக்களத்து' என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) அ + களத்து

4. கதிர் + ஈன என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______________. இ) கதிரீன

மழைச்சோறு

1. கனத்த மழை என்னும் சொல்லின் பொருள் அ) பெருமழை

2. 'வாசலெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______. அ) வாசல் + எல்லாம்

3. 'பெற்றெடுத்தோம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______. ஈ) பெற்று + எடுத்தோம்

4. கால் + இறங்கி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______. ஆ) காலிறங்கி

உரைநடை - கொங்கு நாட்டு வணிகம்

1. 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' என்று குறிப்பிடும் நூல் ______. அ) தொல்காப்பியம்

2. சேரர்களின் தலைநகரம் ______. ஆ) வஞ்சி

3. பழங்காலத்தில் விலையைக் கணக்கிட அடிப்படையாக அமைந்தது ______. ஆ) நெல்

4. ஆன்பொருநை என்று அழைக்கப்ப டும் ஆறு ______.

ஈ) அமராவதி

5. வீட்டுஉபயோகப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டம் ______. இ) கோயம்புத்தூர்

கற்கண்டு - புணர்ச்சி

1. விகாரப் புணர்ச்சி ______ வகைப்படும். இ) மூன்று

2. 'பாலாடை' - இச்சொல்லுக்குரிய புணர்ச்சி ___ இ) திரிதல்

இயல்-6

படைவேழம்

1. சிங்கம் ______யில் வாழும். இ) முழை

2. கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு ___ஆ) அச்சம்

3. 'வெங்கரி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

ஆ) வெம்மை + கரி

4. 'என்றிருள்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

ஈ) என்று + இருள்

5. போல் + உடன்றன என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______. இ) போலுடன்றன

விடுதலைத் திருநாள்

1. வானில் முழுநிலவு அழகாகத் ______________ அளித்தது.

ஆ) தரிசனம்

2. இந்த ____________ முழுவதும் போற்றும்படி வாழ்வதே சிறந்த வாழ்வு. அ) வையம்

3. 'சீவனில்லாமல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______. இ) சீவன் + இல்லாமல்

4. 'விலங்கொடித்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______. ஈ) விலங்கு + ஒடித்து

5. காட்டை + எரித்து என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______. ஆ) காட்டையெரித்து

6. இதம் + தரும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______. அ) இதந்தரும்

பாரத ரத்னாஎம்.ஜி.இராமச்சந்திரன்

1. எம்.ஜி.ஆர். ______ என்னும் ஊரில் கல்வி பயின்றார்.

ஆ) கும்பகோணம்

2. எம்.ஜி.ஆர். படிப்பைத் தொடர முடியாமைக்குக் காரணம்

இ) குடும்ப வறுமை

3. இந்திய அரசு சிறந்த நடிகருக்கான ______ எனும் பட்டத்தை எம்.ஜி.ஆருக்கு வழங்கியது. ஆ) பாரத்

4. ஐந்தாம் உலகத் தமிழ்மாநாடு நடைபெற்ற இடம் ______

இ) மதுரை

5. எம்.ஜி.ஆருக்கு அழியாத புகழைத் தேடித் தந்த திட்டம் ______. அ) மதிய உணவுத்திட்டம்

இயல்-8

கவிதைப்பேழை - ஒன்றே குலம்

1. அறநெறியில் வாழ்பவர்கள் உயிரைக் கவர வரும் ______க் கண்டு அஞ்சமாட்டார்கள். இ) நமனை

2. ஒன்றே ______ என்று கருதி வாழ்வதே மனிதப்பண்பாகும்.

அ) குலம்

3. 'நமனில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______. ஈ) நமன் + இல்லை

4. நம்பர்க்கு + அங்கு என்பதனை ச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______. இ) நம்பர்க்கங்கு

மெய்ஞ்ஞான ஒளி

1. மனிதர்கள் தம் ______ தீய வழியில் செல்ல விடாமல் காக்க வேண்டும். ஈ) ஐம்பொறிகளை

2. ஞானியர் சிறந்த கருத்துகளை மக்களிடம் _அ) பகர்ந்தனர்

3. 'ஆனந்தவெள்ளம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______. இ) ஆனந்தம் + வெள்ளம்

4. உள் + இருக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______. ஆ) உள்ளிருக்கும்

அயோத்திதாசர் சிந்தனைகள்

1.அயோத்திதாசர்______சமூகச்சீர்திருத்தத்தின் தந்தை என்று போற்றப்படுகிறார். இ) தென்னிந்திய

2. அயோத்திதாசர் நடத்திய இதழ்____அ) ஒருபைசாத் தமிழன்

3. கல்வியோடு ______ கற்க வேண்டும் என்பது அயோத்திதாசர் கருத்து. ஆ) கைத்தொழிலும்

4. அயோத்திதாசரின் புதுமையான சிந்தனைகளுக்கு அடித்தளமாக அமைந்தது அவரது _____ அ) ஆழ்ந்த படிப்பு

5. மக்களின் ஒழுக்கத்துடன் தொடர்புடையது _____இ) மழை

கற்கண்டு-யாப்பு

1.அசை ______ வகைப்படும். அ) இரண்டு

2. விடும் என்பது______ சீர். ஆ) நிரையசை

3.அடி ______ வகைப்படும். ஈ) ஐந்து

4.முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ______. ஈ) மோனை

திருக்குறள்

1. ஆண்மையின் கூர்மை ______. ஆ) பகைவருக்கு உதவுதல்

2. வறுமை வந்த காலத்தில் ______ குறையாமல் வாழ வேண்டும். இ) ஊக்கம்

3. 'பெருஞ்செல்வம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______. ஈ) பெருமை + செல்வம்

4. 'ஊராண்மை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______. அ) ஊர் + ஆண்மை

5. திரிந்து + அற்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______. ஆ) திரிந்தற்று

இயல்-9

உயிர்க்குணங்கள்

1. அடுத்தவர் வாழ்வைக் கண்டு ______ கொள்ளக்கூடாது. இ) அழுக்காறு

2. நாம் நீக்கவேண்டியவற்றுள் ஒன்று ______ .அ) பொச்சாப்பு

3. 'இன்பதுன்பம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ______. ஆ) இன்பம் + துன்பம்

4. குணங்கள் + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______. ஈ) குணங்களெல்லாம்

இளைய தோழனுக்கு

1. உன்னுடன் நீயே______கொள். இ) கைகுலுக்கிக்

2. கவலைகள்______அல்ல. ஈ) கைக்குழந்தைகள்

3. 'விழித்தெழும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______. ஆ) விழித்து + எழும்

4. 'போவதில்லை'என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______. அ) போவது + இல்லை

5. 'படுக்கையாகிறது'என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______. ஈ) படுக்கை + ஆகிறது

6. தூக்கி + கொண்டு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______. இ) தூக்கிக்கொண்டு

7. விழித்து + எழும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______. ஆ) விழித்தெழும்

சட்டமேதை அம்பேத்கர்

1. இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் ____ ஆ) அம்பேத்கர் இ) நௌரோஜி ஈ) ஜவஹர்லால் நேரு

2. பூனா ஒப்பந்தம் ____________ மாற்ற ஏற்படுத்தப்பட்டது. ஈ) இரட்டை வாக்குரிமையை

3. சமத்துவச் சமுதாயம் அமைய அம்பேத்கர் ஏற்படுத்திய இயக்கம் __________. அ) சமாஜ் சமாத சங்கம்

4. அம்பேத்கரின் சமூகப்பணிகளைப் பாராட்டி இந்திய அரசு ________ விருது வழங்கியது. ஆ) பாரத ரத்னா

அணி இலக்கணம்

1. பிறிதுமொழிதல்அணியில்______ மட்டும் இடம்பெறும். அ) உவமை

2.இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையையும் வேற்றுமையையும் கூறுவது ______ அணி. ஆ) வேற்றுமை

3. ஒரே செய்யுளை இருபொருள்படும்படி பாடுவது ____________ அணி. ஆ) இரட்டுறமொழிதல்

4. இரட்டுறமொழிதல் அணியின் வேறு பெயர் ________________ அணி. ஈ) சிலேடை

www.Padasalai.Net